

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க நகர் மண்டலத்தில் வார்டு–69 ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.19.77 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டுப்பட்டு வரும் நவீன வசதிகள் கொண்ட சமுதாய நலக்கூடம் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (26.10.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.


### ரூ.38 கோடி செலவில் “இந்தியாவில் முதல்முறையாக”

# தமிழ்நாட்டில் 1 முதல் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இலவச புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம்!

## அமைச்சர் மா,சுப்பிரமணியன் - மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வில் தகவல்!

சென்னை,அக்.27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.10.2025) சென்னை தீவுத்திடலில், தன்னார்வ அமைப்பு மற்றும் ரோட்டரி சார்பில் “ஒரு நடை ஒரு நம்பிக்கை” என்ற பெயரில் 16வது ஆண்டு மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயண நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்றினார்.



மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணம் தொடக்கம்

இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு முன்பாக சுமார் 13 கி.மீ அளவில் நடந்துள்ளேன். வாரத்திற்கு ஒரு முறை நடந்தால் போதும் என்று பலர் நினைக்கிறார்கள். வாரம் முழுவதும் நடக்க வேண்டும் என்கின்ற விழிப்புணர்வில் இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றுள்ளது. இன்றைய நாளில் தினந்தோறும் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு புற்றுநோய் பாதிப்பு வராது என்று அறிவியல் ஆராய்ச்சிகள் மூலம் சொல்லப்பட்டு வருகிறது. இந்த மாரத்தான் நோக்கம் பெண்களுக்கு வருகின்ற மார்பக புற்றுநோய், வாய்ப்புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோய் போன்றவற்றின் மூலம் பெண்களுக்கு இப்பிரச்சினை வராமல் தடுப்பதற்கு காலையில் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். புற்றுநோய் மட்டுமல்ல இருதய பாதிப்புகளும் தடுக்கப்படுகிறது. ஆகையால் ரோட்டரி சங்கம் இந்த நிகழ்ச்சியினை சுமார் 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. ரோட்டரி சங்கம் என்பது உலகளவில் நம்பர் 1 தொண்டு நிறுவனமாக தற்போது உள்ளது. தற்போது உலகில் போலியோ என்கின்ற நோய் இல்லாமல் இருப்பதற்கு ரோட்டரி சங்கம் மட்டுமே பெரிய அளவில் காரணம். தற்போது கால் நூற்றாண்டிற்கு பிறகு போலியோ நோய் கொஞ்சம் கொஞ்சமாக தலைதூக்குகிறது. தற்போது தமிழ்நாட்டில் 6 மாவட்டத்திற்கு மட்டும் போலியோ தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.38 கோடி செலவில் புற்றுநோய்க்கு தடுப்பூசி போட ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். தற்போது டெண்டர் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது தனியார் மருத்துவமனையில் புற்றுநோய் தடுப்பூசி போட ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வரை செலவாகும். ஏழ்மை நிலையில் உள்ள 1 முதல் 14 வயதுடைய பெண்களுக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு ஏதுவாக முதலமைச்சர் முடிவெடுத்திருக்கிறார்கள். கோவிட் காலங்களில் கூட கோவிட் தடுப்பூசி தனியார் மருத்துவமனைகளில் பணம் கொடுத்து போடப்பட்டிருந்த நிலையில் மாநில அரசு ஒன்றிய அரசிற்கு ரூ.100 கோடி பணம் கொடுத்து இலவசமாக போட முயற்சி செய்த நிலையில்தான் இந்தியா முழுமைக்கும் உள்ள மாநிலங்களுக்கு தடுப்பூசி போட ஒன்றிய அரசு முடிவு செய்தது. தமிழ்நாட்டில் புற்றுநோய்க்கு இலவசமாக தடுப்பூசி போட உள்ள நிலையில் இந்தியா முழுமைக்கும் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது. உலக அளவில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 58 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்படுகிறது எனவும், இந்திய அளவில் 1 இலட்சம் மக்கள் தொகைக்கு 28 பேருக்கும் மகளிருக்கு மார்பக புற்றுநோய் ஏற்படுகிறது. புற்றுநோய் பாதிப்புகள் அதிகமாக வருகிறது என்று தமிழ்நாட்டில் ஈரோடு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் 2023 நவம்பர் 22 ஆம் தேதி Screening வேலை தொடங்கினோம். தற்போது தமிழ்நாடு முழுவதும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு புற்றுநோய் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. அதற்கான ஒரு விழிப்புணர்வாக ரோட்டரி சங்கம் இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நான் மேயராக இருந்தபோது சென்னை லயன்ஸ் சங்கமும், பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து வடகிழக்கு பருவமழைக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி லிம்கா புத்தகத்தில் இடம் பெற்று சாதனை படைத்திருந்தோம். அத்தகைய புகழ் ரோட்டரி சங்கத்திற்கு உண்டு. மேலும் எனக்கு 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் காரணமாக எனது கால் மற்றும் தலையில் பெரிய பாதிப்பு. நான் பிழைக்கமாட்டேன் என்று நிறைய பத்திரிக்கைகளில் எல்லாம் செய்திகள் போட்டார்கள். அந்த செய்தியினை பொய்யாக்கி இன்று ஓட ஆரம்பித்து இன்று வரை 164 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். மேலும் வெளிநாடுகளான அமெரிக்கா, கத்தார், ஜப்பான் போன்ற 14 நாடுகளில் ஓடியிருக்கிறேன். இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில் 24 மாநிலங்களில் ஓடியிருக்கிறேன். இன்னும் 12 மாநிலங்கள் நிலுவை இருக்கிறது. இன்னும் வடகிழக்கு மாநிலங்களில் ஓடவில்லை. மாரத்தான் போட்டி தொடங்கினால் அங்கேயும் ஓடத் தொடங்கி விடுவேன். மேலும் நடைப்பயிற்சி முடிந்து என்னுடைய சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவு செய்யும்போது நான் எங்கேயாவது செல்லும்போது என்னை அமைச்சராகவோ அல்லது முன்னாள் மேயர் என்றோ பார்ப்பத்தில்லை. எங்கே பார்த்தாலும் நடப்பாரே அவர் செல்கிறார் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள், மேலும் உங்களை பார்த்து நாங்களும் நடைப்பயிற்சி செய்வதாக கூறுகிறார்கள் அது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மரு. சிவகாமி சுந்தரி, மரு.அர்ஜீன் ரங்கராஜன், திரைப்பட நடிகை சஞ்சிதா ஷெட்டி, ரோட்டரி சங்க நிர்வாகிகள் கம்டார், ஸ்ரீதர், ராஜசேகரன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட மேற்கு பகுதியில்

# வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## வை.ம. அருள்தாசன் பங்கேற்பு!

சென்னை, அக். 27 -

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆணையேற்று மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ அவர்கள் வழிகாட்டுதலில் 24.10.25 மற்றும் 25.10.25 ஆகிய இரு தினங்களாக திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட எண்ணூர் 2 வது வட்டம் கமலம்மாள் நகர், வள்ளுவர் நகரில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து நேரில் சென்று பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதியில் வசிக்கும் மக்களிடம் கலந்துரையாடி தேவைகள் குறித்து கேட்டறிந்தார். பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் அப்பகுதியில் உள்ள அனைத்து தெருக்களிலும் நேரடியாக பார்வையிட்டு குறுகலான சந்துகளில் வசித்து வரும் மக்கள் மழைக்காலத்தில் சிரமமின்றி நடந்து செல்வதற்கு கால்வாய்களை பார்வையிட்டு மழை நீர் விரைவாக வெளியேற தடுப்பு களை அகற்றும் இப்படியும் ஆங்காங்கே நிரம்பி இருக்கும் புதர்களால் பாம்பு உள்ளிட்ட பூச்சித்தொல்லை அதிகரித்து வருவதாகவும் மக்கள் கூறியதை தொடர்ந்து புதர்களை களையவும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றவும் தேவைப்படும் இடங்களில் கிருமி நாசினி தெளிக்கவும் அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கமலம்மாள் நகரில் இயங்கி வரும் கழிவுநீர் உந்து நிலையத்தில் தினசரி சேகரிக்கப்படும் கழிவு நீர் குறித்த விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்து கழிவுநீர் உந்து நிலையத்தின் செயல்பாட்டினை மேற்பார்வையிட்ட நிகழ்வின்போது 2 வது வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர் எக்ஸ் எம் சி, பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல், எம். சந்திரகுமார், பி.கே.எஸ்.சதீஷ்குமார், கே.பாலு எஸ்.தாமரை , ஆர். மதன்குமார் , சி. சேகர், ஹெச் ரியாஸ் எம். ராமு, ஜெ. பிரேம்குமார், ஆர். காம்ளி , எஸ். வினோத் ஜெ. மாரிமுத்து, டைட்டஸ், செல்லா மற்றும் அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.61, புதுப்பேட்டை பகுதியில் உள்ள மீர் மதன் அலி தெரு, டிரைவர் தெரு, டிரான்ஸ்போர்ட் லேன், வேலாயுதம் 3–வது மற்றும் 4–வது சந்து, சுப்புராய முதலி தெரு ஆகிய தெருக்களில் மோன்தா புயல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, அத்தெருக்களில் தேங்கியிருக்கும் குப்பையை அப்புறப்படுத்தவும்; கழிவு நீரை வடிகாலில் வெளியேற்றவும்; மின்சாரப் பெட்டிகளைத் தரையிலிருந்து உயர்த்தி வைக்கவும்; மின்சார கேபிள்களைப் பூமிக்கடியில் புதைக்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு துறை அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் வாரியம் மற்றும் மின் வாரியத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசு செய்தி தொடர்புத்துறை (TNDIPR) சார்பில் ‘என் பள்ளி என் பெருமை’ என்ற போட்டியில் சென்னை மாவட்டத்தில் முதன்மையாக தேர்வு செய்து 16.10.2025 சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 17 வது வட்ட கழக பகுதி பிரதிநிதி கே. ராஜா புதல்வன் கமேஷ்ராஜாவுக்கு அமைச்சர்கள் மு.பே.சாமிநாதன், அன்பில் மகேஷ் ஆகியோரால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பதக்கத்தைப் பெற்றதை அடுத்து சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றார். வழக்கறிஞர் ந.பரந்தாமன், வி.திராவிடவீரன், கௌரிசங்கர்லால், கே.ராஜா, எஸ்.சுகேந்திரன், பி.எல்.குமார், த.ஸ்டாலின், எம்.எஸ்.ஆர்.சேகர்ராஜன், எஸ்.பார்த்தசாரதி, பி.அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டத்தில், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை:

# பல்வேறு இடங்களில் தேங்கியுள்ள மழை நீர் அகற்றம் - பழவேற்காடு முகத்துவாரத்தில் ஆய்வு!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு மேற்கொண்டார்!

திருவள்ளூர் அக் 27

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் , பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், காட்டுப்பாக்கம் ஊராட்சி, ஸ்ரீநகர் பகுதி மற்றும் நசரத்பேட்டை ஊராட்சி, யமுனா நகர் பகுதியில் தேங்கியுள்ள மழை நீர் அகற்றும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

திருநின்றவூர் நகராட்சிக்குட்பட்ட ஈசா ஏரி பகுதியில் நீர்வளத்துறை சார்பில் ரூ.9.3 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிக்கால்வாய் அமைக்கும் பணிகளையும், பொன்னேரி வட்டம் தத்தமஞ்சி ஊராட்சி ஆரணியாற்றின் கரையோரப் பகுதிகள் பலப்படுத்தப்பட்டுள்ள பணிகள் தொடர்பாகவும், பொன்னேரி வட்டம், பழவேற்காடு முகத்துவாரம் பகுதியில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் மணல் திட்டுக்கள் உருவாவதை தடுக்கும் வகையில் நடைபெறும் நிரந்தர முகத்துவாரம் அமைக்கப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மீனவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய தீர்வுக்கான சம்மந்தப்பட்ட துறை மாண்புமிகு அமைச்சர் உள்ளிட்ட துறை உயர் அலுவலர்களிடம் தெரிவிக்கப்படும் என அமைச்சர் சா.மு. நாசர் தெரிவித்தார்.

பின் அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வருமுன் காப்போம் என்ற உணர்வின் அடிப்படையில் பருவ மழை தொடங்குவதற்கு முன்பே பேரிடர் மேலாண்மை கூட்டத்தைக் கூட்டி அந்தக் கூட்டத்தின் அடிப்படையில் எங்கு எங்கெல்லாம் மழை வெள்ளம் ஏற்படுமோ அந்த இடங்கள் எல்லாம் நேரடியாக கள ஆய்வு செய்து வருகின்றனர். அங்கு வாழ்கின்ற மக்களுக்கு பாதுகாப்புகாவும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி தர வேண்டும் என்று உத்தரவிற்கிணங்க, திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பூவிருந்தவல்லி பகுதிகளில் பல்வேறு இடங்களில் உள்ள கால்வாய்களை பார்வையிட்டும் , துரிதமான பணிகளை ஏற்பாடு செய்து அங்கு உள்ள நீர் வழித்தடங்களை எப்படி சரி செய்வது என்று ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து திருநின்றவூர் ஈசா ஏரியினை அங்கு நடைபெற்று வரும் பணிகளை நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், வரும் நாட்களில் கன மழை இருக்கும் பட்சத்தில் அதனை எப்படி சரி செய்வது அதற்கான முன்னேற்பாடு பணிகள் செய்ய வேண்டும் என்பதை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் பழவேற்காட்டில் வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு ஏற்படாத வகையில் வருமுன் காப்போம் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது வடகிழக்கு பருவ மழையை கையாளுவதற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.பொது மக்களை வெள்ள பாதிப்பில் இருந்து பாதுகாத்திட தயார் நிலையில் உள்ளோம் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இவ் ஆய்வில், திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கே.பி.கார்த்திகேயன்,திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், பூவிருந்த வல்லி சட்டமன்ற உறுப்பினர் அ.கிருஷ்ணசாமி, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்/ இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் ராஜவேல், கொசஸ்தலையாறு வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய நகர செயலாளர்கள் தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், மு.முரளி தரன், மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்தில் – ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில்

# ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் 3 திட்டப் பணிகள்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் நேரில் ஆய்வு செய்தார்!

தருமபுரி, அக்.27-

தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 3 திட்டப்பணிகள் ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை ம ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், முன்னிலையில் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார்.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் ரூ.47.88 இலட்சம் மதிப்பீட்டில் 200 கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இவ்விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரப்பகுதியில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் 250 கல்லூரி மாணவியர்கள் தங்கி பயிலும் வகையில் சமூகநீதி கல்லூரி மாணவியர் புதிய விடுதி கட்டடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்து, இப்பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு வழங்க அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்விடுதிக் கட்டடத்தின் தரைத் தளத்தில் 10 அறைகளும், முதல் தளத்தில் 16 அறைகளும் மற்றும் இரண்டாம் தளத்தில் 16 அறைகளும் என மொத்தம் 42 அறைகளுடன் மாணவியர்கள் தங்கும் அறை கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும் ஒரு அறைக்கு 6 மாணவியர்கள் தங்கும் வகையில் தனித்தனி கழிவறை மற்றும் குளியலறை வசதிகளும், அனைத்து அறைகளிலும் ஒவ்வொரு மாணவியருக்கும் தனித்தனி கட்டில் மற்றும் படிப்பதற்காக நாற்காலிகளுடன்கூடிய தனித்தனி மேஜைகள், உணவருந்தும் அறையில் 100 பேர் வரை அமர்ந்து உணவருந்தும் வகையில் மேஜைகளும், சமையலறை, பொருட்கள் வைப்பு அறை மற்றும் RO குடிநீர் வசதி, விடுதி காப்பாளர் அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வெள்ளாளப்பட்டி கிராமத்தில் அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்பு பகுதி மேம்பாடு திட்டம் மற்றும் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் ரூ.127.49 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அறிவு மைய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளின் தரம் குறித்து கேட்டறிந்தார். இக்கிராம அறிவு மைய கட்டிடத்தின் தரைத்தளத்தில் 100 பேர் அமரும் வகையில் திறன் மேம்பாட்டுக்கூடம், திட்ட பொருட்காட்சி அறை, ஆண்கள் மற்றம் பெண்களுக்கான கழிவறை மற்றும் முதல் தளத்தில் 100 பேர் அமரும் வகையில் விவசாயிகள், சுயஉதவிக்குழுக்கள் பயன் பெறும் வகையில் பயிற்சி மையம், ஆலோசனை அறை மற்றும் கணினி அறை உள்ளிட்ட அறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.கவிதா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.தேன்மொழி, மாவட்ட மேலாளர் தாட்கோ வி.ராமதாஸ், சேலம் தாட்கோ செயற்பொறியாளர் கண்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முகாமை தொடங்கி வைத்து பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்ட பயனாளிகளுக்கு பல்வேறு சான்றிதழ்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கினர் உடன் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் ,பொதுக்குழு உறுப்பினர் த. எத்திராஜ், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், கே.தரணி, சண்முகம், டி.கே.சீனிவாசன், எஸ்.சௌந்தரராஜன், வி.தியாகராஜன், வழக்கறிஞர் ஸ்ரீ.முருகா த.சுகுமார், கே.சரவணன், ஆர்.பிரபு, வி.சங்கர், புருஷோத்தமன், பாலசந்திரன், வி.சதீஷ், எம்.செந்தில், எம்.டி.பாலாஜி, ஆர்.கார்த்திக், சிவா பிரகாஷ், எம்.கார்த்திக், உள்பட பலர் உள்ளனர்



தாம்பரம் மாநகராட்சி 4,வது மண்டலத்திற்கு உட்பட்ட 54,வது வார்டு,பாப்பன் கால்வாயின் சுவர் மழையின் காரணமாக விழுந்ததை தொடர்ந்து தகவலறிந்து மாநகராட்சி அதிகாரிகளையும் ஊழியர்களையும் அழைத்து வந்து சரி செய்யும் பணியை மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் துரிதமாக பணி நடைபெறுவதை பார்வையிட்டார் உடன் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி,மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகரன் மற்றும் நலச்சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்